**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, PONNERI**

**Case No : CC No.164/2025**

**Prosecution Witness : LW 1/ PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : Siddhiq Basha | | : |
| Father Name | : Ismail | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(A1,A2,A4 and A5 present, A3 absent )**

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **24/11/2025**

**<u>முதல் விசாரணை ( அரசு தரப்பு )</u>**

நான் தற்பொழுது எண். 12, அம்புதுல்கலாம் அசார் தெரு, அரியன்வாயிலில் வசித்து மீஞ்சூரில் துணி கடை ஒன்று நடத்தி வருகிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு 2ம் மாதத்தில் தேதி நியாபகமில்லை எனது கடையில் யாரோ வந்து மிரட்டிவிட்டு சென்றார்கள் என்று வியாபார சங்கத்தில் சொன்னேன். அவர்கள் இது குறித்து காவல் நிலையம் சென்று புகார் அளிக்குமாறு கூறினார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அ.த.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸ் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசு தரப்பில் அ.சா.1 ஐ பிறழ்சாட்சியாக பாவிக்க கோரியதன் பேரில், நீதிமன்றம் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி பின்னர் நீதிமன்ற அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை</u>**

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

கடந்த 22.02.2023 அன்று இரவு சுமார் 09.00 மணிக்கு 5 நபர்கள் எனது கடையில் அத்துமீறி நுழைந்தார்கள் என்றும் அதில் ஒருவர் கத்தியை காண்பித்து தனது அண்ணன் தேவராஜ்க்கு ரௌடி மாமுல் கொடுக்க வேண்டும் என்றும் அருவறுக்கத்தக்க வார்த்தைகளால் திட்டி உடன் வந்த தீபக், சந்தோஷ், கண்ணன் மற்றும் சரத்ராஜ் என்பவர்களின் பெயர் சொல்லி அழைத்து ரௌடி மாமுல் கொடுக்கவில்லை என்றால் அண்ணன் சொன்னது போல் போட்டு தள்ளிவிடலாம் என்று கத்தியை காட்டி மிரட்டிவிட்டு சென்றார்கள் என்று காவல் நிலையத்தில் புகார் அளித்துவிட்டு போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதை மறுக்கிறேன்.